**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.10/2021**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஆதிமூலம் | மதம் | : இந்து |
| த/பெ | : முத்து நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 50 | கிராமம் | : இலுப்பூர் |
| தொழில் : | விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**14.11.2025**

<u>வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

4. வழக்கு சொத்தின் கிழக்கு பக்கம் வடக்கு தெற்காக தெரு உள்ளது என்றால் சரிதான். சாலை வழக்கு சொத்தின் எந்த பக்கம் உள்ளது என்றால் மேற்கே உள்ளது. தற்போது சாலையாக உள்ள இடம்தான் முன்பு பாட்டை (பாதை) ஆக இருந்தது என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு மேற்கே முன்பு ராமலிங்க நாயுடு இருந்தார் என்றாலும் அவர் கோவிந்தசாமியின் அப்பா என்றாலும் சரிதான். வழக்கு சொத்திற்கு தெற்கே செங்கம்ம நாயுடு இருந்தார் என்றால் சரிதான். தற்போது கோவிந்தசாமி உடையார் உள்ளார் என்றால் சரிதான். இதற்கு மத்தியில் உள்ள சொத்திற்குதான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து ஆதியில் பெருமாள் நாயுடு, முத்து நாயுடு ஆகியோரிடமிருந்தது என்பதை காட்ட நான் SLR நகலோ அ பதிவேடு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்து ஆதியில் நாற்றங்கால் இருந்தது என்பதை காட்ட நான் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 3 பட்டாவில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் நாற்றங்கால் பட்டாதான் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்திற்கான பட்டா எண்.383 ஏற்கனவே பெருமாள் நாயுடு, முத்து நாயுடு ஆகியோர் பெயரில் இருந்தது என்பதை காட்ட நான் பட்டாவோ அ பதிவேடோ தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் பட்டா எண்.383ஐ தாக்கல்

செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு பட்டா எண்.383ஐ தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

6. உண்மையில் முந்தைய பட்டா எண்.383ல் இருந்திருந்தால் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 3 பட்டாவில் அந்த பட்டா மாறுதல் உத்தரவு எண் குறிப்பிட்டிருப்பார்கள் என்றால் அது UDR க்கு முந்தைய பட்டாவாகும். இது UDR க்கு பிந்தைய பட்டாவாகும். எனது பிராதில் எந்த இடத்திலாவது UDR க்கு முந்தைய பட்டா, UDR க்கு பிந்தைய பட்டா என்பதை குறிப்பிட்டுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். வழக்கு சொத்திற்கான ஆவணங்கள் தீ விபத்தில் எரிந்துபோனது என்பதற்கு வருவாய் துறையினர் கொடுத்த ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. முத்து நாயுடுக்கும் பெருமாள் நாயுடுக்கும் இடையே பாகப்பிரிவினை ஆனதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பாகப்பிவினைக்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. இதுவரை அவர்களுக்குள் பாகம் பிரிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

7. முத்து நாயுடுக்கும் பெருமாள் நாயுடுக்கும் இடையே பாகம் பிரிக்காத நிலையில் எனக்கும் என் அப்பாவிற்கும் எப்படி சொத்து வந்தது என்பதை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். முத்து நாயுடுக்கும் பெருமாள் நாயுடுக்கும் இடையே பாகம் பிரிக்காத நிலையில் எனக்கும் என் அப்பாவிற்கும் எப்படி சொத்து வந்தது என்பதை காட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாற்றங்கால் இடம் தற்போது கிராம நத்தமாக மாறியதாக கூறியிருப்பதில் அது எந்த வருடம் அவ்வாறு மாறியது என்பதை என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் முடியாது. நாற்றங்கால் நான் சொல்வதுபோல் கிராம நத்தமாக மாற வாய்ப்பே இல்லை என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

8. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 3 பட்டா இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வருவாய் துறையிடம் பெற்றுள்ளேன் என்றால் ஆமாம். பழைய ஆவணங்கள் எரிந்துவிட்டதால் இதை வாங்கி தாக்கல் செய்தேன். வா.சா.ஆ 3 பட்டா வாங்கும்போது என்ன ஆவணத்தை கொடுத்து பட்டா பெற்றேன் என்றால் கிராம நிர்வாக அலுவலரிடம் உள்ள அ பதிவேடை பார்த்து பட்டா எண்ணை எடுத்து இந்த பட்டா பெற்றேன். முத்து நாயுடு, பெருமாள் நாயுடு பெயரில் உள்ள பட்டா எண்.383 ல்

நாற்றங்கால் இருந்ததை காட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 4 ஆவணம் அசல் இல்லை என்றால் இல்லை. அசல்தான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 4 ஆவணம் புகைப்பட நகல் என்றால் இல்லை. அசல்தான். வா.சா.ஆ 4 ஆவணம் சார்பதிவாளர் கையெழுத்து இல்லை என்றாலும் நான் முறையான அதிகாரியிடம் இருந்து வா.சா.ஆ 4 ஆவணத்தை பெறவில்லை என்றாலும் சரியல்ல. அசலைதான் தாக்கல் செய்துள்ளேன். முறையான அலுவலகத்தில் இருந்து பெறாத வா.சா.ஆ 4 ஆவணம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

9. பிரதிவாதிகள் அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லியிருப்பதில் குறிப்பாக என்ன இடம் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்றால் 2 1/2 செண்ட் நிலமாகும். 2 1/2 செண்ட் முழுவதும் ஆக்கிரமிப்பு செய்து விட்டார்களா என்றால் ஆமாம். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்து விவரம் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. பிரதிவாதிக்கு எப்படி உரிமை வந்தது என்பதை அவர்களது எதிர்வழக்குரையை படித்து விவரம் தெரிந்துகொண்டேனா என்றால் அவர்கள் வீடு பின்னால் இருந்தது. இந்த இடத்தையும் எங்கள் இடம் என்று கூறி ரவுடிகளை வைத்து பஞ்சாயத்து பேசி கம்பி வேலி அமைத்துவிட்டார்கள். நான் இருக்கும் இடத்திற்கும் வழக்கு சொத்திற்கும் நடுவில் 5 மீட்டர் இடம் இருக்கும் என்றால் நான் மனை இருக்கும் தெருவில் இருந்து பக்கத்து தெருவில் குடியிருக்கிறேன்.

10. வழக்கு சொத்திற்கு பக்கத்தில் உள்ள சொத்தை என் பாட்டி மாரியம்மாள் பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்தார் என்றால் ரூ.200/–க்கு கிரையம் கொடுத்தார். எந்த வருடம் என் பாட்டி மாரியம்மாள் பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்தார் என்றால் நான் குழந்தையாக இருந்தேன். சுமார் 50 வருடத்திற்கு முன்பு கிரையம் கொடுத்திருப்பார் என்றால் இருக்கும். 1969ல் என் பாட்டி கிரையம் கொடுத்தார் என்றால் இருக்கும். அந்த விவரத்தை என் பாட்டியிடம் நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் என் அப்பா சொன்னார். பிரதிவாதி வீடு கட்டியுள்ளது எவ்வளவு இருக்கும் என்றால் 3 செண்ட் இருக்கும். பிரதிவாதியின் வீடு 3 செண்ட் இருக்கும் என்பதையும் வழக்கு சொத்து நாற்றங்காலாக இருந்து கிராம நத்தமாக மாறியுள்ளது என்பதையும் காண்பிக்க நீதிமன்ற ஆணையர் நியமனத்திற்கு நடவடிக்கை எடுத்தேனா

என்றால் எடுத்தேன். நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டாரா என்றால் ஆமாம்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)